**ஜா-எல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜா-எல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஜா-எல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2 (உ), (ஏ), 1.2.3, 1.2.4, 1.2.6, 1.2.7(அ), (ஆ)(ii), (இ), 2.2.2 மற்றும் 3.4.1

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18.7 மற்றும் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய LGD/10/A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன செலவின மானியம் ரூபா 103,452,469 இனால் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், குறைக்கப்பட்டு சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் குறிப்பிடப்படாமல் நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மாற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 210,492,335 தொகையான மூலதன செலவினங்கள் ஆண்டின் செலவினமாக மிகை அல்லது பற்றாக்குறை சீராக்கத்திற்காக விரிவான வருமானக்கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை மற்றும் நடைமுறை வேலை சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள கையில் உள்ள மீதி ரூபா 1,323,657 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பு இலக்கம் 11 இன் கீழ் கையில் உள்ள காசாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | பட்டுவத்த உப அலுவலகம் மற்றும் நூலக கட்டிட நிர்மாணம் மற்றும் தண்டுகம | செயற்பாடுகளை விரைவாக ஆரம்பித்து பூர்த்தி செய்வதற்கான | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உப அலுவலகம் மற்றும் பொது நூலகத்தின் இரண்டு மாடிக் கட்டிட நிர்மாணத்திற்காக முறையே ரூபா 8,000,000 மற்றும் ரூபா 8,000,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 16,000,000 மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோராக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையிலும் அதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியக் கடன்கொடுத்தோர் மீதி 2020 ஆம் ஆண்டிற்காக மாத்திரமான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதிக்கு சமமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் கட்டளையிடப்பட்டு களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெறாத பெறுமதி ரூபா 1,133,025 ஆன பொருட்கள் காணப்பட்டமையால் அப்பெறுமதியால் களஞ்சிய கடன்கொடுத்தோர் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | களஞ்சிய கடன்கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாக்கப் படுகின்றது என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கடன் கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களினதும் அதற்கு நேரொத்த அறிக்கையினதும் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கிடையே ரூபா 323,953,943 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 236,425 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை தீர்த்து வைப்பதற்காக நியமிக்கப்பட்ட கணக்குகள் ஆலோசனையாளரின் அறிக்கையின் பிரகாரம் சட்ட விதிகளுக்கு இணங்க திரண்ட நிதியத்தில் சீராக்கி மீதியை அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் அது உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் ஆலோசனையாளரிட மிருந்து கிடைக்கப் பெற்ற அறிக்கை உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(3) | வைப்புச் செய்யப்பட்டு 03-05 வருடங்களுக்கிடையிலான ரூபா 11,056,747 மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 16,905,882 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 27,962,629 தொகையான நானாவித வைப்பை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 70,783,624 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட விஞ்சிய வருமானம் ரூபா 137,137,461 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 8,782,000 தொகையான வாடகை நிலுவை, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 16,388,000 வரை அதிகரித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலுவையில் அறவிடப்பட்ட பணம் ரூபா 2,629,669 ஆனமையால் நிலுவை அறவிடுதல் நலிவான நிலையில் காணப்பட்டது. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு எதிராக 2450/SPL ஆம் இலக்க வழக்கிற்கு சபையின் பிரதிநிதித்துவம் இன்மை காரணமாக ஒரு தரப்பாக முறைப்பாட்டாளருக்கு சாதகமாக வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்திலிருந்து 2003 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 500,000 தொகை மற்றும் மாதாந்த நட்டக் கட்டணம் ரூபா 10,000 என்பவற்றை செலுத்துதல் தொடர்பான சலுகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 4,168,015 வரை அதிகரித்திருந்ததுடன் 2021 மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 03 தவணைகளில் செலுத்தி முடிவுறுத்தியதன் காரணமாக அந்த | முறையீட்டு வழக்கு விசாரணைக் காலத்திற்குரியதாக ரூபா 10,000 வீதம் செலுத்த வேண்டியதற்கு ஏற்பட்டமையால் இந்த தொகை அதிகரித்திருந்தது என அறியத்தருகின்றோம். | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகையால் சபைக்கு நட்டமொன்றை ஏற்படுத்திய நபர் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பெறுகைகள்

### 3.2.1 பொருட்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்காக 125W மேர்கரி (ஒஸ்ராம்) மின்குமிழ்கள் கொள்வனவு செய்த போது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திலிருந்து 800 மின்குமிழ்கள் காண்பிக்கப்பட்ட விலையினை விட அதிகரித்த விலையில் வேலை அத்தியட்சகரின் பரிந்துரையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 33,600 ஆக இருந்ததுடன் அந்த மின்குமிழ்களின் தரமும் குறைவானதாக இருந்தமை காண்பிக்கப்பட்டு மீண்டும் புதிதாக கூறுவிலை கோரி அந்த நிறுவனம் முன்னர் கூறுவிலைகோரும் போது காண்பிக்கப்பட்ட விலையினை விட அதிகரித்து 2750 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 618,750 ஆகும். 2019 ஆம் ஆண்டில் மின் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது 50W Street குரோபா LED மின்குமிழ், குழாய் மற்றும் ஆணிகளுடன் 90 கட்டளைகள் மற்றும் 15W LED மின்குமிழ்கள் 10035 என்பன தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறைந்த கூறுவிலை கிடைத்திருக்கும் போது அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் 02 விடயங்களின் மொத்த நட்டம் ரூபா 71,385 ஆகும். மேலும் 1/044 வயர் ரோல்களை கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கொள்வனவு செய்யாமையால் அதில் ரூபா 11,985 நட்டமொன்று | விரைவாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினையாக இருந்தமையால் மாதிரிகளை பரீட்சித்து தருமாறு வேலை அத்தியட்சகரின் பரிந்துரையின் பிரகாரம் தலைவரின் அங்கீகாரத்தின் படி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

ஏற்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்தமாக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக இந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.2.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணுவன சமகி மாவத்தையில் 1 ஆவது ஒழுங்கை அபிவிருத்தி செய்யும் 1 ஆவது கட்டத்திற்காக முறையே ரூபா 3,866,537 மற்றும் ரூபா 2,228,787 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.1 மற்றும் 2.4.1 இன் பிரகாரம் இதற்காக தேசிய ரீதியில் கேள்வி கோரப்பட்டு பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதற்கான கேள்விக் காப்பீடு, ஒப்பந்தகாரருக்கு இறுதிப் பணம் செலுத்துகின்ற திகதியான 2020 மார்ச் 27 ஆந் திகதியின் பின்னர் 2020 மே 18 ஆந் திகதி, 2020 மார்ச் 8 ஆந் திகதி எழுதிய காசோலை கிடைத்திருந்தது. 0.225 மீற்றர் உயரமும் 235 கனமீற்றருடைய றெடிமிக்ஸ் கொங்கிறீட் ஈடுபடுத்தப்பட்டதாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 12 ஆந் திகதி கணக்காய்வினால் பெறப்பட்ட கொங்கிறீட் குறுக்கு வெட்டுக்கள் 04 இன் சராசரி உயரம் 0.191 மீற்றர் ஆகும். அதன் பிரகாரம் கணிப்பீடு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் அளவின் கனமீற்றர் 200.28 ஆக இருந்த போதிலும் கனமீற்றர் 33.72 இற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் ரூபா 565,148 ஆகும். 02 ஆவது | விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டமாக இருந்தமையால் பெறுகைக் குழு நியமிக்க முடியாதிருந்ததுடன் எங்களால் வெட்டப்பட்ட இடங்களில் 09 அங்குலத்திற்கு காணப்பட்டதை அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டத்தின் வீதியின் ஒரு பகுதியான 35 மீற்றர் நீளம், 01 ஆவது கட்டத்தின் போது கொங்கிறீட் இடப்பட்டமையினால் 02 ஆவது கட்டத்தின் போது ரூபா 949,539 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கந்தான பிரதான அலுவலக வளவில் முன்பக்க வேலியை நவீனமயப்படுத்துதல் ஒரு மாதத்தில் நிறைவேற்றுவதற்காக சங்கத்துடன் ரூபா 977,160 பெறுமதியில் 2020 மார்ச் 08 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலையின் விடய இலக்கம் 02 இன் பிரகாரம் 9'10" நீளத்தில் வேலி அமைப்பதற்காக 134 அடி இரும்புகள் செலவிட்டதாக காண்பிக்கப்பட்டு நாற்சதுர இரும்பு பார்களின் நீள அடிகளுக்காக ரூபா 2,875 வீதம் கிரயம் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2020 ஒக்தோபர் 05 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 9'10" நீள வேலிக்காக இரும்பு 96 அடி நீளம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு அடி நீளத்திற்காக செலவான முழுமையான கிரயம் ரூபா 2,258 ஆனமையால் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 122,412 ஆகும். கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் ரூபா 84,944 தொகை மீண்டும் அறவிட்டிருந்த போதிலும் மீதி தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>வேலி நிர்மாணத்தின் போது இரும்பு வேலைகள் மற்றும் தொழிலாளர் ஊதியத்திற்காக முழுமையான மேலதிக செலுத்துதல்கள் ரூபா 142,754 ஆக இருந்ததுடன் பிழையாக மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அவற்றை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | இந்த வேலைக்காக உள்ளபடியாக மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 84,235 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | பிழையாக மிகை மதிப்பீடு தயாரித்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யாதிருத்தல் வேண்டும். |